

தஞ்சாவூர் மாவட்டம் மஹாராஜா மஹால் திருமண மண்டபத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை சார்பில் மூன்றாம் ஆண்டு சர்வதேச பொதுசுகாதார மாநாட்டினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.10.2024) தொடங்கி வைத்து சிறப்பு மலர் மற்றும் ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் , தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), .டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வ விநாயகம், கூடுதல் இயக்குநர் மரு.ப.சம்பத் , மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி , துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), சுப. தமிழழகன் (கும்பகோணம்) மற்றும் பலர் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2024–25ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபுஆகியோர் ஆலந்தூர், புதுத்தெருவில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டுவரும் புதிய சமுதாய நலக்கூடத்தினை ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன், அலுவலர் பி.எஸ்.சீனிவாசன், செயற்பொறியாளர் .பாண்டியன், முதுநிலை திட்ட அமைப்பாளர் திருமதி.அனுஷியா ரவிக்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை 4 வது மண்டலத்திற்குட்பட்ட ஆர்.கே.நகர் ,பெரம்பூர் பகுதியில் உள்ள

# 15 வார்டுகளுக்கான மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## நேதாஜி யு.கணேசன் தலைமையில் நடைபெற்றது !

சென்னை அக்:4

வடகிழக்கு பருவ மழை தொடங்க உள்ள காரணத்தால் சென்னை மாநகராட்சி பகுதியில் பாதிப்புகளில் இருந்து மக்களை தற்காத்துக் கொள்வதற்கு தயார் நிலையில் இருக்க தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க சென்னை மாநகராட்சி ஆணையர் உத்தரவின் பேரில் தண்டையார்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி 4வது மண்டல அலுவலகத்தில் மழைக்கால அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சென்னை மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமை வகித்தார்.சிறப்பு அழைப்பாளர்களாக தண்டையார்பேட்டை மண்டலத்திற்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர் கண்ணன், வடக்கு மண்டல துணை ஆணையர் கட்டா ரவி தேஜா ஆகியோர் கலந்துகொண்டு மழைக்கு முன்பு செய்யக்கூடிய பணிகள் குறித்து விவாதித்தனர்.

இந்த கூட்டத்தில் திமுக, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத்துறை, மின்வாரியத்துறை, குடிநீர் வாரியம், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள காரணத்தால் தண்டையார்பேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர் ஆகிய வார்டுகளில் தாழ்வான பகுதிகளில் கண்டறிந்து தற்போது 68 இடங்களில் தண்ணீர் நிற்கிறது அந்த இடங்களில் தண்ணீரை வெளியேற்ற மோட்டார்கள் தயார் நிலையில் வைக்க வேண்டும் மேலும் கொடுங்கையூர் கால்வாய்,கேப்டன் கேனான், ஜவகர் கேனால், பக்கிங்காம் கால்வாய், உள்ளிட்டவை தூர்வாரப்பட்டு வருகிறது. இன்னும் பணிகள் முடியாமல் இருந்தால் விரைந்து முடிக்க வேண்டும் என்று கூறினர்.

மேலும் மழை பாதிப்பின் போது பாதிக்கப்படுபவர்கள் தாழ்வான பகுதியில் இருந்து மீட்கப்பட்டு அவர்கள் தங்குவதற்கு இடங்கள் தயார் நிலையில் வைக்கவும் சுகாதாரத்துறை சார்பில் காய்ச்சல் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் மக்களுக்கு மருந்து மாத்திரைகள் மருத்துவ குழு ஆகியவை தயார் நிலையில் வைப்பது மின்சார வாரியத்தின் தாழ்வான மின் பெட்டிகளை உயர்த்தி வைப்பது கழிவுநீர் கால்வாய்கள் மழைநீர் கால்வாய்கள் ஆகியவற்றில் உள்ள அடைப்புகளை அகற்றுவது மேலும் தூர் வாருவது மாநகராட்சி அனுமதி இல்லாமல் மின்வாரியம் குடிநீர் வாரியம் ஆகியவை சாலையில் பள்ளம் தோண்ட அனுமதி இல்லை பழுதடைந்த சாலைகளில் தற்காலிக சாலை அமைப்பது பருவ மழையில் பாதிப்பு ஏற்பட்டால் தங்க வைக்கப்படும் மக்களுக்கு உணவு சமைக்கும் கூடங்கள் உடனடியாக அவர்களுக்கு வழங்க பால், பிரட் போர்வை ஆகியவை தயார் நிலையில் வைப்பது மழையின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு சென்று நிவாரண பொருட்கள் வழங்கியும் உதவிகள் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த கூட்டத்தில் மண்டல அதிகாரி சரவணமூர்த்தி, பகுதி செயற்பொறியாளர்கள் திருநாவுக்கரசு, ஹரிநாத், குடிநீர் வாரிய செயற்பொறியாளர் உமா சங்கர், மற்றும் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




இராயபுரம் சட்டமன்றத் தொகுதி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் உள்ள அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி மண்டலக் குழுத் தலைவர் .ஸ்ரீராமலூ ஆகியோர் தலைமையில் வடகிழக்கு பருவமழையை எதிர்க்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறிந்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் சென்னை மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரியம் மின்சாரத்துறை, நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு துறை, வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளையும் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் மழைக்குப்பின் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் மண்டல 5ன் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட அனைத்து அரசுத் துறை அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்றனர்.



தாம்பரம் தொகுதி புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், மதுரப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில். காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபை கூட்டம், ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். கிராம சபையில் மதுரப்பாக்கம், அகரம் தென், திருவஞ்சேரி, ஒட்டியம்பாக்கம், ஒன்றிய கவுன்சிலர் அமுதா வேல்முருகன், பொறியாளர் பிரேமசுதா. மதுரப்பாக்கம் கிளைக் கழக செயலாளர். இரா.சந்தானம்.எம்.சி,, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலையரசி சங்கர், கோ.நாகரத்தினம், வெ.டில்லிபாபு, சரிதா சந்தானம், தேவி சரவணன், வீ. வெங்கடேச பெருமாள், கிராம பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். இதில் 100க்கும் மேற்பட்ட புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்து தந்தமைக்கு முதல்வர் தளபதி அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, ஊராட்சி தலைவர் வேல்முருகன் ஆகியோருக்கு பொது மக்கள் தங்களின் நன்றியினை தெரிவித்து தீர்மனம் நிறைவேற்றினர்கள் .

